# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.261/2023.

Prosecution witness for P.W. 14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மூக்கன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் காவல்துறையில் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்ற தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 20.01.2023 அன்று தூத்துக்குடி தென்பாகம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.12 பதிவு செய்து வைத்திருந்த அ.சா.ஆ 12 வழக்கை அன்றே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 18.15 மணியளவில் சம்பவ இடமான சிதம்பர நகர் மையவாடி அருகில் உள்ள CSI தேவாலயம் அருகில் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் அ.சா.5 மற்றும் மணி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 2. அந்த வரைபடம் **அ.சா.ஆ 15**. பின்னர் சம்பவ இடத்தில் காணப்பட்ட ஒரு ஜோடி செருப்பையும், சம்பவ இடத்திலிருந்து ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத தரை ஓட்டுத் துண்டுகளையும், வெள்ளை நிற வேட்டி ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 3. மேற்படி ஒரு ஜோடி செருப்பு மற்றும் ரத்தம்பட்ட மற்றும்

ரத்தம்படாத தரை ஓட்டுத் துண்டுகள், மேற்படி வேட்டி ஆகியவை **சா.பொ.4 முதல் 7**. பிறகு சம்பவ இடத்தில் இருந்த மகாராஜன் என்பவரின் பிரேதத்தின்மீது 19.45 முதல் 22.15 மணி வரையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ 16**. பின்பு பிரேதத்தை அ.சா.10 மூலம் வேண்டுகோள் கடிதத்தின் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி சவக் கிடங்கில் வைக்க ஏற்பாடு செய்தேன். அந்த கடிதம் **அ.சா.ஆ 17**. 21.01.2023 அன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனையின்போது அ.சா.10 உடனிருந்து பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். பின்பு சாட்சிகள் அ.சா.5, மணி, பஞ்சாயத்தார்கள்ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு அ.சா.1, அ.சா.2, அ.சா.7, அ.சா.12, ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 21.01.2023 அன்று இரவு 7 மணியளவில் FCI ரவுண்டான அருகில் நின்று கொண்டிருந்த எதிரியை சந்தேகத்தின்பேரில் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.6, அவரது உதவியாளர் சுந்தர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 4. அதன் அடிப்படையில் தூத்துக்குடி ராஜீவ் நகர் 10 வது தெருவில் தனது வீட்டில் எதிரி மறைத்து வைத்திருந்த சவுக்கு கட்டை மற்றும் ரத்தம்பட்ட டீ சர்ட், ரத்தம்பட்ட பேண்ட் ஆகியவற்றை ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 5. மேற்படி வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 முதல் 3. பிறகு எதிரியையும், வழக்கு சொத்துக்களையும் நிலையம்

கொண்டு வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு சாட்சிகள் அ.சா.6 மற்றும் அவரது உதவியாளரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அ.சா.8, அ.சா.10, அ.சா.11, அறிவியல் அலுவலர் தான்யா, உடல் உறுப்புகளை ரசாய பரிசோதனை செய்த அறிவியல் அலுவலர் வெங்கடேஷ், அ.சா.9, அ.சா.13 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்படி இறந்துபோனவரின் உள்ளுறுப்புகளில் நச்சுத் தன்மை எதுவும் இல்லை என்று வழங்கப்பட்ட நச்சியல் அறிக்கை **அ.சா.ஆ 18**. ரத்த மாதிரியை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து மதுரை ஆய்வகத்திற்கு அனுப்பியதற்கான கடிதம் **அ.சா.ஆ 19**. என் புலன் விசாரணையை முடித்து எதிரிமீது இதச 294(பி), 302 ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 2 பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் சிமெண்ட், வெள்ளை, கருப்பு நிறம் கலந்த தரை ஓடுகள் இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 3 கைப்பற்றுதல் மகஜரிலும் நான் அப்படி சொல்லவில்லை என்றால் சரிதான். படிவம் 91–ஐ இரண்டு மாதங்கள் கழித்துதான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். படிவம் 91ல் அ.சா.ஆ 2 மற்றும் 3 ல் இல்லாத விபரங்களை சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மையவாடி சுழல் விளக்கிலிருந்து பிரேதம் 85 அடி தூரத்தில் இருந்ததாக அ.சா.ஆ 2 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அ.சா.ஆ 15 வரைபடத்தில் 65 அடி தூரத்தில் பிரேதம் இருந்ததாக காட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். தூத்துக்குடி மையவாடியில் எத்தனை தகன மேடை உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எரியூட்டும் தகன மேடைக்கு அருகில்தான் பேருந்து நிறுத்தம் உள்ளது

என்றால் சரிதான். மையவாடி பரப்பளவு எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. எத்தனையாவது வாடியில் பிரேதம் இருந்தது என்றால் எனக்குத் தெரியாது. நான் அ.சா.6 மற்றும் அவரது உதவியாளரை அழைத்துச் சென்றுதான் எதிரியை கைது செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை நான் சொல்லச் சொல்ல நிலைய எழுத்தர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். எழுதிய தாளில் அ.சா.6 கையொப்பமிட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு, மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் பிரதி எடுத்தேன். அந்த கடையின் உரிமையாளர் பெயர் தெரியாது. அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை. அதற்கு குறிப்பிட்ட காரணமும் இல்லை. மேற்படி ரவுண்டானாவிலிருந்து மேம்பாலம் வரையில் எங்கும் ஜெராக்ஸ் கடை இல்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்தவுடன் முதலில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அதற்கு பிறகுதான் படிவம் 91 தயார் செய்தேன். அ.சா.ஆ 5 கைப்பற்றுதல் மகஜரில் சவுக்கு கட்டையின் அளவுகளை சொல்லவில்லை. மேற்படி டீ சர்ட் மற்றும் பேண்ட் என்ன நிறம் என்று அ.சா.ஆ 5 ல் சொல்லவில்லை. அ.சா.ஆ 5 ல் இல்லாத விபரங்களான சவுக்கு கட்டையில் இருபுறமும் ஆணி இருந்ததாக அ.சா.ஆ 6 படிவம் 91 ல் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி சவுக்கு கட்டை ஒரு புறம் எரிந்திருந்ததாக நான் தாக்கல் செய்த புகைப்படங்களில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் அ.சா.1 புகார் கொடுக்கவில்லை என்றும், அ.சா.12 வழக்கும் பதிவு செய்யவில்லை என்றும், நானும், முறையான புலன் விசாரணை செய்யவில்லை என்றும், நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரி

எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நானும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு வழக்கு ஆவணங்களையும், சான்றுப் பொருட்களையும் தயாரித்துக் கொண்டு எதிரிமீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District& Sessions Judge,
Thoothukudi.